2011 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

62—

புதிய கட்டடம்

***399—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, பொன்னமராவதி வட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கான உரிய செயற்குறிப்பினைப் பெற்று, பரிசீலனை செய்து, அரசு விரைவில் முடிவெடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.*

திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோர்க்கும் எல்லாம் கிடைக்க அல்லும், பகலும் அயராது உழைக்கும் எங்கள் அம்மாவின் ஆட்சியில், திருமயம் தொகுதி, பொன்னமராவதி தாலுகா அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதனால் பொதுமக்களுக்கு வசதிக் குறைவாக உள்ளது. அரசு அலுவலகங்கள் அனைத்தும் படிப்படியாகச் சொந்தக் கட்டடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துள்ள மாண்புமிகு இதய தெய்வம், தங்கத் தாரகை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் நடப்பு நிதியாண்டிலேயே சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது என்பது உண்மை. மாதம் ரூ.12,000 வாடகை கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு இடம் தேர்வு செய்வதற்குக் காலதாமதமாகி, இப்பொழுது பொன்னமராவதியிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தள்ளி, தூத்தூர் என்ற கிராமத்திலே ஒரு கள்ளாங்குத்து புறம்போக்கு நிலத்தைக் கையகப்படுத்துகின்ற அளவிலே இருக்கின்றது. நிலம் கையப்படுத்தப்பட்டதற்குப் பின்னால், 2.25 கோடி ரூபாய் செலவாகும் என்பதால் இந்த நிதியாண்டில் முடியுமா என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து ஆராயப்படும். அதுமட்டுமல்லாமல், உங்கள் மாவட்டத்திற்கு ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்போது கந்தர்வக்கோட்டை தாலுகா அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு நிதியை ஒதுக்கியிருக்கின்றார்கள். வருங்காலத்தில் நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, பரிசீலிக்கப்படும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி அவர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து.*

திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னமராவதி அருகில் இரண்டு இடங்கள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே ஆய்வு செய்யச் சொல்லி, இரண்டு இடங்களில் ஏதாவது ஓர் இடத்தைத் தேர்வு செய்து, அதை இந்த நடப்பு ஆண்டிலேயே கட்டித் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

2011 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. மூர்த்தி அவர்கள்.

திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து என்னுடைய துணைக் கேள்வியைத் தொடங்குகின்றேன். மாதவரம் தொகுதியிலே, மாதவரம் தாலுகா அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டு இருக்கிறது. அந்தத் தாலுகா அலுவலகத்திற்குப் புதியதாகக் கட்டடம் கட்டித் தர முடியுமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் மொத்தம் 12 வட்டாட்சியர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்திலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதைப்போல, படிப்படியாக அதற்கு நிதியை ஒதுக்கி உரிய வகையிலே கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில், பெண்ணாகரம் வட்டத்திலுள்ள வட்ட அலுவலகம் நீண்ட காலமாக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து செயல்பட்டு வருகிற கட்டடமாக உள்ளது. அதைப் புதிய கட்டடமாக உருவாக்கித் தர தமிழக அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது, பழைய கட்டடமாக இருக்கின்றது, அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தர முடியுமா என்று கேட்டு இருக்கின்றார்கள். ஏற்கெனவே, 12 அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டு வருகின்றன. முதல் உரிமை அவற்றிற்குக் கொடுக்கப்பட்டு, பிறகு இதுபோன்ற கட்டடங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியோடு கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

63—

நீதிமன்றம்

***164—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரத்தில் குற்றவியல் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன், செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன்னாலே, நித்தம் நித்தம் நாங்கள் போற்றி வணங்குகின்ற எங்களுடைய இதய தெய்வம், கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், கடந்தகால மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியால், நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக இருண்டு கிடந்த தமிழகத்தில் ஒளியேற்ற வந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என்னுடைய நன்றியினைக் காணிக்கையாக்கி பதில் சொல்ல விழைகிறேன்.*